செ.வெ.எண்: 557 நாள்: 14.09.2011

## தமிழ்நாடு அரசு கேபிள் டிவி கார்ப்பரேஷன் லிமிடெட்

# செய்தி வெளியீடு

தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம், அனைத்து குடும்பங்களுக்கும் எளிய நடைமுறையை பின்பற்றி குறைந்த செலவில் நிறைவான கேபிள் டிவி சேவையை வழங்குதற்பொருட்டு தனது கேபிள் டிவி சேவையை தமிழகம் முழுவதும் (சென்னை நீங்கலாக) 02.09.2011 தொடங்கியுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, அனைத்து மாவட்டங்களிலும் தொடங்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அறைகளை நிர்வகிக்கும் பொருட்டு, டெக்னிக்கல் அஸிஸ்டெண்ட், டெக்னிசியன் மற்றும் லைன்மேன்/அசிஸ்டெண்ட் டெக்னிசியன் போன்ற பணியிடங்களுக்கு வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாக தேர்வு செய்வதற்காக, தகுதியான நபர்கள் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் 22.09.2011 க்குள் பதிவு செய்ய வேண்டும் என அறிவுறுத்தி தினத்தந்தி நாளிதழில் 07.09.2011 அன்று விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளது. எனவே, தமிழ்நாடு அரசு கேபிள் டிவி கார்ப்பரேஷனில் இப்பணிகளில் சேர விரும்பும் தகுதியான நபர்கள், அந்தந்த மாவட்டங்களில் உள்ள வேலைவாய்ப்பு அலுவலகத்தில் 22.09.2011 க்குள் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் General Manager (Operations). Business Development Manager ஆகிய உயர் பணிகளுக்கு நேரடியாக விண்ணப்பிக்க கோரி தி இந்து நாளிதழில் 07.09.2011 அன்று விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளது. எனவே, தமிழ்நாடு அரசு கேபிள் டிவி கார்ப்பரேஷனில் இப்பணிகளில் சேர விரும்பும் தகுதியான நபர்கள், 22.09.2011 க்குள் நேரடியாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலாண்மை இயக்குனர்
12.9.11

வெளியீடு: –

ஆணையர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.